பீப்பள்ஸ் லீசிங் அண்ட்
பினான்ஸ் பி.எல்.சி

2014/15

# 365 DAYS THAT WERE...

பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பி.எல்.சி

2014/15

# 365 DAYS THAT WERE...

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| தலைவரின் செய்தி | 5 |
| பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு | 9 |
| சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கையின் மொழி பெயர்ப்பு | 15 |
| இலாபம் அல்லது நட்ட கூற்று | 16 |
| விரிவான வருமானக் கூற்று | 17 |
| நிதி நிலைமைக் கூற்று | 18 |



## தலைவரின் செய்தி




# 365 DAYS THAT WERE...

**"அதன் வரலாற்றிலேயே சிறந்த செயற்திறனைப் பதிவுசெய்வதற்காக, கம்பனியானது அதன் வணிக மாதிரிகள் மற்றும் செயற்பாடுகளை சாத்தியமான விதத்தில் செயலாற்றி, இயக்கி முகாமைப்படுத்தியது"**



வர்த்தக இயலுமையில் வெறுமனே கவனஞ்செலுத்தும் குறுங்கால செயற்பாடுகளிலிருந்து நகர்ந்து, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தோற்றங்களை ஒன்றிணைக்கும் நீண்டகால அணுகுமுறையானது மெய்யாகவே செயற்பாட்டில் நிலைநிறுத்தும் தன்மைக்கு வழிசமைத்துள்ளது.



ஆளுகை, சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொறுப்புணர்வு என்பவற்றை போஷிக்கும் ஓர் கூட்டாண்மை கலாச்சாரம் மற்றும் எமது வணிக மூலோபாயம் என்பவற்றுக்கிடையே ஓர் சரியான கலவையினை நிலைநிறுத்தியதுடன் தொடர்ந்துவரும் வருடங்கள் எவ்வித சந்தேகமுமின்றி கம்பனிக்கு உயர்ந்தமட்டத்திலான சாதனைகளை கொண்டுவரும்.

**அன்பின் பங்காளர்களே,**

தலைமைத்துவ நிலையிலுள்ள பீபள்ஸ் லீசிங் அன்ட் பைனான்ஸ் பி.எல்.சி. இனை ஆளுகைப்படுத்தும் கூட்டணியில் நான் இணைந்துள்ள வேளை, நான் எனது பொறுப்பு பற்றி ஆழமான உணர்வினைக் கொண்டுள்ளேன் - எனது மிகச் சிறந்ததை வழங்குவதும், இந்த மதிப்பிற்குரிய நிறுவனத்தின் நிலைநிறுத்தக்கூடிய முன்னேற்றப் பாதைக்கு வழிகாட்டுவதும் துணைபுரிவதும் ஆகும். நான் பதவியேற்று தற்போது ஒரு மாதத்திற்கும் சற்று அதிகமாகக் காணப்படுவதுடன் இந்நிறுவனம் பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் அதன் பணிவான ஆரம்பத்திலிருந்து எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை அறிந்துகொள்ளும்போது நான் மெய்யாகவே மகிழ்ச்சியடைகிறேன். சிறந்த ஆளுகை மற்றும் நெறிமுறையான வணிக நடைமுறைகளுடன் ஓர் திடமான ஆதாரமாகவும் மற்றும் நாட்டிலேயே மிகப் பெரிய வங்கியல்லாத நிதியியல் நிறுவனமாக வருவதற்கு அதன் செயற்பாடுகளில் தனிச்சிறப்பை எட்டுவதும் இலக்காக உள்ளது.

புதிய பணிப்பாளர் சபையின் சார்பில்,' கடந்து வந்த 365 நாட்கள்' - நிதிக் கூற்றுக்களுடனான வருடாந்த அறிக்கை 2014/15 இனை சமர்ப்பிப்பதில் நான் பெருமையடைகின்றேன். வருடத்தில் கடைப்பிடிக்கப்பட்ட மூலோபாயம், நடவடிக்கைகள் மற்றும் சாதனைகள் என்பவற்றை விபரிக்கும் பொறுப்பினை எமது பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு விட்டுவிடும் அதேவேளை

நான் இந்த சந்தர்ப்பத்தில் கம்பனியின் செயற்திறன் பற்றி எனது சுருக்கமான கண்ணோட்டத்தினை பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். வருடத்தில் காணப்பட்ட பாரிய பொருளாதார தோற்றம் மற்றும் பாரிய மற்றும் நிலைநிறுத்தக்கூடிய வெற்றியை பெற்றுக்கொள்வதற்கு எதிர்வரும் வருடத்திற்கான எதிர்கால மூலோபாயம் மற்றும் திட்டங்கள் என்பன பற்றி பார்ப்போம்.

### உலகளாவிய பொருளாதாரம் - சமனற்ற மற்றும் மிதமானது

ஐந்து வருடங்களுக்கும் மேலாகக் காணப்பட்ட பின்னடைந்த போக்கிலிருந்து சிறந்த பகுதிக்கு நகரும் சமயம் உலகளாவிய பொருளாதாரமானது, சமனற்றதாக மிதமான மட்டத்தில் காணப்பட்ட போதிலும் தொடர்ச்சியாக மீளெழுந்தது. ஐக்கிய அமெரிக்காவினால் முன்னணி வகிக்கும் வளர்ச்சியடைந்த நாடுகள் மற்றும் சில முக்கியமான ஐரோப்பிய நாடுகள் அவர்களது நுகர்வோர் நம்பிக்கை மற்றும் முதலீட்டாளர் உணர்வுகள் ஆகியவற்றில் ஓர் மறுமலர்ச்சியினை கண்டதுடன் இது வளர்ச்சிப் போக்கிற்கு வலுவளித்தது. ஆயினும், புறச்சுற்றில் காணப்பட்ட சில ஐரோப்பிய வலயப் பொருளாதாரங்கள் தொடர்ச்சியான மந்த நிலையில் காணப்பட்டன. இதே சமயம் ஜப்பான் இறைவரி மற்றும் நாணயத் தூண்டுதல்களுக்கு மத்தியிலும் பூச்சிய வளர்ச்சியை நோக்கி பின்னடைந்தது. ஓர் பரந்த மட்டத்தில் வெளித்தோன்றும் மற்றும் அபிவிருத்தியடையும் நாடுகள் இன்னமும் திடமாகக் காணப்பட்டபோதிலும், கட்டமைப்பு மற்றும் கொள்கை கட்டுப்பாடுகளிலிருந்து தூண்டப்படும் அழுத்தங்களின் பயனாக அவற்றின் வளர்ச்சி உத்வேகத்தில் பின்னடைவைக் காட்டின. உலகளாவிய ரீதியில் வியாபித்திருந்த எண்ணெய் விலைகளில் காணப்பட்ட கூர்மையான வீழ்ச்சி மற்றும் நாணயமாற்று வீதத்தில் காணப்பட்ட அசைவுகளின் நிமித்தம் மாறுபடும் தாத்பரியங்கள் மற்றும் மாறுபடும் மட்டத்திலான தாக்கங்களை விளைவித்தன. பூகோள அரசியல் பக்கத்தில், மத்திய கிழக்கு மற்றும் ரஷ்ய - உக்ரேன் ஆகியவற்றில் ஏற்பட்ட போராட்டங்களின் நிமித்தம் உக்கிரமடைந்த நிச்சயமற்ற தன்மைகள் காலநிலை மாற்றங்களுடன் ஒன்றிணைந்து உலகளாவிய எதிர்பார்ப்புகளை தொடர்ந்தும் பாதித்தது.

இந்த நிலைமையில் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியானது 2014 இல் முன்னைய ஆண்டைப்போலவே 3.4 சதவீதமாகக் காணப்பட்டதுடன் 2015 க்கான நோக்கம் இன்னமும் ஓர் மிதமான 3.5 சதவீதமாகும். ('உலக பொருளாதார நோக்கம் ஏப்ரல் 2015', சர்வதேச நாணய நிதியம்)

### இலங்கையின் பொருளாதாரம் - வளர்ச்சி மற்றும் உறுதி

சமனற்ற உலகளாவிய பொருளாதார போக்குகள் மற்றும் உள்வாரி சவால்களின் மத்தியில், இலங்கை ஒப்பீட்டளவில் ஓர் சமனான பாரியபொருளாதாரச் சூழலைப் பராமரிப்பதில் வெற்றியடைந்தது. பொருளாதாரம் மீளெழுச்சியுடன் வளர்ச்சியடைந்து 2014 இல் உயர்ந்த வளர்ச்சியான 7.4 சதவீதத்தை எட்டியது. இது பிராந்திய மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது முன்னணியில் காணப்பட்டது. கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகள் மேம்படுத்தப்பட்ட செயற்திறனைக் காண்பித்ததுடன், காலநிலையில் காணப்பட்ட மாற்றங்கள் விவசாயத் துறையினை அதன் சாத்தியப்படக்கூடிய வளர்ச்சியினை அடைவதிலிருந்து கட்டுப்படுத்தியது.

நாணயக் கொள்கையானது தொடர்ந்தும் தாராளமாகக் காணப்பட்டதுடன் சந்தை வட்டி வீதங்கள் சாதனையான குறைந்த மட்டத்தில் இருந்தன. இருப்பினும், தனியார்துறையிலிருந்து வரும் கடனுக்கான கேள்வி ஆண்டின் இறுதிப்பாகம் வரை மந்தமாகவே காணப்பட்டது. உலகச் சந்தையில் வீழ்ச்சியடையும் போக்கினைக் கொண்ட பண்டங்களின் விலைகளினால் பணவீக்கமானது குறைவடைந்து தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாக ஒற்றை எண்ணின் நடுப்பகுதியில் பராமரிக்கப்பட்டது. சென்மதி நிலுவையானது பலமான உத்தியோகபூர்வ ஒதுக்க நிலைமை மற்றும் ஒப்பீட்டளவில் திடமான நாணயமாற்று வீதம் என்பவற்றுடன் கணிசமானளவு முன்னேற்றமடைந்தது. எவ்வாறாயினும் இறைவரி ஒருங்கிணைப்பானது எதிர்பார்த்த விளைவினை எட்ட முடியவில்லை. வருடத்திற்கான கண்ணோட்டம் உயர்ந்த நடுத்தர வருமான நிலையினை அடைவதனையும் மற்றும் வளர்ச்சி உத்வேகத்தினை நிலைநிறுத்துவதனையும் இலக்காகக் கொண்டிருந்தது. (இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2014).

### வங்கியல்லாத நிதித்துறை - மீளெழுச்சியினை காண்பித்தல்

தாராளமயப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை மற்றும் கடனுக்கான மந்தமான கேள்வி என்பவற்றினால் பணச் சந்தையானது உயர்ந்த திரவத்தன்மையுடையதாக காணப்பட்டது. வங்கியல்லாத நிதித்துறையானது, பாரிய விவேகமுள்ள அடிப்படைகளை பராமரிப்பதில் கவனஞ்செலுத்துவதனூடாக, பொருளாதாரத்தில் அதன் நிலைப்படுத்தலை உறுதிசெய்தது. பொறுப்பேற்புகள் மற்றும் இணைப்புகள் இத்துறையினை மேலும் ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் வீரியத்தினை மேம்படுத்துவதற்கும் வசதியளித்தது. செயற்திறனற்ற தேக்கமானது கட்டுப்படுத்தப்பட்டு ஓர் சிறிய அதிகரிப்பினை பிரதிபலித்து இலாபகரத்தன்மை மட்டங்களுக்கு உதவியளித்ததுடன் இலாபமானது பரந்தளவில் மாற்றமின்றி காணப்பட்டது. சொத்து மட்டத்தில் காணப்பட்ட வளர்ச்சியானது குறைந்த மட்டத்திலான தனியார் துறை கடன் வளர்ச்சியின் பின்னணியில் மிதமாகக் காணப்பட்டது.

### வணிக மாதிரி - சிறந்த ஒருமைப்பாடு

எமது பாரிய பொருளாதார தோற்றத்தில் காணப்பட்ட சிக்கலான நிலையின் மத்தியில் கம்பனியானது அதன் வணிக மாதிரியில் அதன் சவால்களைச் சந்தித்து அதன் செயற்பாடுகளுக்கு முகங்கொடுத்து, இயக்கி மற்றும் முகாமைப்படுத்தி அதன் வரலாற்றில் சிறந்த செயற்திறனுடைய ஆண்டினைப் பதிவுசெய்தது. மெய்யாகவே, வருடத்தில் நிலைநிறுத்தப்பட்ட மூலோபாயமானது நிச்சயமாக சமநிலையுடையதாகவும் சாமர்த்தியம் மிக்கதாகவும் காணப்பட்டது. வர்த்தக இயலுமையில் வெறுமனே கவனஞ்செலுத்தும் குறுங்கால செயற்பாடுகளிலிருந்து நகர்ந்து, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தோற்றங்களை ஒன்றிணைக்கும் நீண்டகால அணுகுமுறையானது மெய்யாகவே செயற்பாட்டில் நிலைநிறுத்தும் தன்மைக்கு வழிசமைத்துள்ளது. இடர்நேர்கை முகாமைத்துவத்தில் தந்திரமுள்ள கொள்கைகளுடன் அவசியமான கட்டுப்பாடுகளும் இருப்புகளும், முறைமைப்படுத்தல் அங்கங்களினால் வழங்கப்பட்ட பொருத்தமான நியமங்களுக்கமைய கூட்டிணைப்பு ஆளுகையில் சிறந்த நடைமுறைகளை பின்பற்றும் கடப்பாடும் ஒன்றிணைந்து துறையில் காணப்படும் சிறந்த கம்பனியெனும் நிலையினை பலப்படுத்தியது.

அத்தகைய ஓர் வணிக அமைப்பில், மனதில் பதியத்தக்க ஓர் நிதியியல் செயற்திறனை எட்டியதற்கும் பங்குதாரர் விளைவினை அதிகரித்ததற்கும் ஊழியர் குழாமை நாம் பாராட்டவேண்டும். கம்பனியானது திடமான தேறிய வட்டி வருமானத்தை நிலைநிறுத்துவதற்கும் பிரபலமான தேறிய இலாபமான ரூபா 3.75 பில்லியனை அடைவதற்கும் இயலுமாயிருந்தது. இது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 20.14 சதவீத வளர்ச்சியாகும். செயல்முறை கட்டுப்பாடுகள் அதன் கடன் தேக்கத்தின் தரத்தைப் பராமரிப்பதற்கு கம்பனிக்கு உதவியதுடன் செயற்திறனற்ற விகிதாசாரமானது குறித்த இலக்கினுள் வைக்கப்பட்டதுடன் அது துறைசார் சராசரிக்கும் குறைவாகக் காணப்பட்டது. பங்குதாரர்களது நிதியத்திலான விளைவானது ஓர் திடமான 18.61 சதவீதத்தை எட்டியது.

நிதியியல் கலையினால் பலப்படுத்தப்பட்டு மற்றும் துறையினுள் பெற்றுள்ள மதிப்பு என்பன சிறந்த நிதியளித்தல் தெரிவிற்கு வழிசமைத்ததுடன் வருடத்தின் இறுதியில் நிதியியல் நிலைமையானது ஆரோக்கியமாகவும் திடமாகவும் காணப்பட்டது. மூலதனப் போதுமை விகிதாசாரமான 20.22 சதவீதம் இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளிலும் பார்க்க அதிகமாகக் காணப்படுகின்றது.

கம்பனியினால் அடைந்துள்ள நிதியியல் விளைவுகளின் அடிப்படையில், எமது பெறுமதி மிக்க பங்குதாரர்களுக்கு நாம் இறுதிப் பங்கிலாபமாக ஒரு பங்கிற்கு 50 சதத்தை பங்கிலாபமாகப் பிரகடனப்படுத்துவதற்கு முன்மொழிகின்றோம்.

**கண்ணோட்டம் - உயர்ந்த செய்கைகள்**

பல வருடங்களாக ஓர் சிறப்பான கூட்டாண்மை பயணத்தினை தொடர்ந்து, ஆளுகை, சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொறுப்புணர்வு என்பவற்றை போஷிக்கும் ஓர் கூட்டாண்மை கலாச்சாரம் மற்றும் எமது வணிக மூலோபாயம் என்பவற்றுக்கிடையே ஓர் சரியான கலவையினை நிலைநிறுத்தியதுடன் தொடர்ந்துவரும் வருடங்கள் எவ்வித சந்தேகமுமின்றி கம்பனிக்கு உயர்ந்தமட்டத்திலான சாதனைகளை கொண்டுவரும். மத்திய மற்றும் நீண்டகாலத்தில் உலகளாவிய பொருளாதாரத்திற்கு முன்னால் காணப்படும் திடமான வளவாய்ப்புகளுடன் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சமூக அபிவிருத்தியில் ஓர் உயர்ந்த பீடத்தை எட்டும் இலங்கையின் இலட்சியத்துடன் ஒன்றிணைந்து எமது கம்பனியானது செயற்பாட்டில் உச்சநிலையை எட்டக்கூடிய மெய்யான சாத்தியத்தினைக் கொண்டுள்ளது. வெளிக்களம், சாதனங்களது பலதுறைப்புலமை, பெறுமதி சேர்த்தல், குழும இணைதிறம் மற்றும் மூலோபாய சமூக பொறுப்புணர்ச்சி என்பவற்றில் விசாலம் மற்றும் ஆழத்துடனான உள்ளக சாத்தியப்பாடுகளை ஆராயும் அதேவேளை நாட்டின் எல்லைக்கப்பால், விசேடமாக தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் காணப்படும் வாய்ப்புகளை எட்டுவதற்கும் முயற்சிக்கப்படுகின்றது.

எமது எதிர்கால இலட்சியங்களை எட்டுவதற்கு அவசியமான நிதியியல் ஆற்றலை நாம் கொண்டுள்ளோம். - பி.எல்.சி. எனும் அடையாளத்தின் பலத்தால் ஆதரிக்கப்படுதல்; நிதியியல் களத்தில் தலைமைக் கம்பனியின் திடமான மதிப்பு மற்றும் ஸ்தானம்; சிறப்பாக இணைக்கப்பட்டுள்ள துணைக்கம்பனி வலையமைப்பு; செயற்திறன் நோக்கிய மற்றும் சக்திவாய்ந்த அணி; புதிய யுக வணிகத்திற்கு பொருத்தமான நவீன தொழில்நுட்பத்தில் உணர்வுமிக்க முதலீடுகள் மற்றும் பயனுறுதிமிக்க ஓர் இடர்நேர்கை முகாமைத்துவம் என்பனவாகும். எமது கூட்டாண்மையின் பாரம்பரியத்தின் பண்புகள் - பகிர்ந்துகொள்ளப்படும் பெறுமதியினை உருவாக்கும் எமது செயற்பணியில் முக்கியமான பங்காளிகளுடன் ஈடுபடுவதில் நாம் கவனஞ்செலுத்தி நல்ல உறவினை வளர்த்தல் ஆகும். சமூகப் பொறுப்புணர்வுக்கான எமது கடப்பாடு தொடர்வதுடன் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான முன்னெடுப்புகளுக்கு தேறிய இலாபத்தில் 2.5 சதவீதத்தினை ஒதுக்கும் தீர்மானமானது நிலைத்திருக்கும்.

இந்த ஆதாரமானது, பொறுப்புணர்வு, பொறுப்புடைமை மற்றும் தொழில்சார் நிபுணத்துவம் என்பவற்றால் அடிக்கோடிடப்பட்ட எமது கூட்டாண்மை நிர்வாகத்துடன் எமது இலட்சியங்கள் ஒன்றிணைவதை உறுதிப்படுத்தும். இது தொடர்பில் எனது பணிப்பாளர் சபையானது பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் அவரது முகாமைத்துவ அணி என்பன நன்கு பொருத்தமானதாகவும் கடப்பாடுடையதாகவும் காணப்படும் என நான் நம்புகின்றேன்.

**பாராட்டுக்கள்**

தலைவர் என்ற பொறுப்பினை நான் பொறுப்பேற்கும் சமயம், நான் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல்.சி. மற்றும் மக்கள் வங்கியின் பணிப்பாளர்கள் சபையின் எனது சகாக்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன்; தலைசிறந்த இந்த நிறுவனத்தின் செயற்பணியினை முன்னெடுத்துச் செல்லவும் தேவையான செயல்முறையினை உருவமைத்து ஆரம்பிப்பதற்கு அவர்களது தடையற்ற உறுதுணைக்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். எனது பாராட்டுக்கள் பிரதம நிறைவேற்று அதிகாரிக்கு, அவரது மூலோபாய உள்ளுணர்வு மற்றும் கடப்பாடுடைய இயக்கம் என்பவற்றுடன் எமது காலப்பகுதியில் காணப்படும் சவால்களுக்கு மத்தியில் அவரது முகாமைத்துவ அணியுடன் இணைந்து செயற்பாடுகளை வழிநடத்துவதற்காக உரித்தாகின்றது. எதிர்கால முயற்சிகளை எடுத்துச்செல்வதற்கு அவர்களது எழுச்சிமிக்க முகாமைத்துவத்தில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன். அனைத்து ஊழியர்களும் அவர்களது செயற்திறன் பட்டையை உயர்த்தியதற்கும் செயற்பாட்டு கடமைகளில் தனிச்சிறப்பை எட்டுவதற்கும் அவர்களது பங்களிப்பிற்காக எனது பாராட்டுக்கள் - சிறப்பாக மேற்கொள்ளப்பட்ட ஓர் பணி.

எமது கூட்டாண்மை செயற்பணியில் அனைத்து பங்காளிகளுக்கும் அவர்களது நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மைக்காக நன்றியைத் தெரிவிக்கும் அதேவேளை, உயர்ந்த இலக்குகள் மற்றும் வளமை நோக்கிய எமது ஒற்றுமையான முயற்சிகளுக்கு ஒன்றுதிரண்டு ஆதரிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றேன்.



**ஹேமசிரி பர்னாந்து**
*தலைவர்*
பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி

2015 ஏப்ரல் 29
கொழும்பு



# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு



## 365 DAYS THAT WERE...

**“திடமாக நிற்பதற்கும் எமது கூட்டாண்மை கோட்பாட்டினை நிலைநிறுத்தவும் மற்றும் இதன்மூலம் புகழ்பரப்பும் விளைவுகளுக்கு இட்டுச்செல்லவும் எம்மால் இயலுமையாயிருந்தது - இந்த வருடத்திற்கான ஆண்டறிக்கையில் - ‘கடந்து வந்த 365 நாட்கள்’, வெற்றியானது நன்கு பிரதிபலிக்கப்பட்டுள்ளது”**

நாம் செயற்படும் சமூகங்களை எவ்வாறு சிறப்பாக எட்டலாம் என்றும், எமது கரிம அடிச்சுவட்டினை உறுதிசெய்தல் மற்றும் ஓர் பசுமையான சூழலை நோக்கி நாம் கடைப்பிடிக்கவேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றிலும் கவனஞ் செலுத்தினோம்.

மீளாய்வாண்டில் எமது ஒன்றுதிரட்டப்பட்ட விளைவுகள் பி.எல்.சி. குழுமத்தின் பலத்துக்கு ஓர் ஒப்பந்த உறுதியாக காணப்பட்டது. திரளாக்கப்பட்ட வருமானமானது ஓர் திடமான செயற்திறனை பதிவுசெய்தது.

### கடந்து வந்த 365 நாட்கள்

விரைவாக மாற்றமடையும் வணிக நிலத்தோற்றத்தின் மத்தியில், 2014/15 வருடத்தில் பீபள்ஸ் லீசிங் அன்ட் வைனான்ஸ் பி.எல். சி ஓர் தலைசிறந்த செயற்திறனை பதிவுசெய்து முன்னேறியுள்ளது. வங்கியல்லாத நிதித் துறையினுள் எமது சலுகைமிக்க நிலைமையினை வளர்க்கும்வேளை, நாம் எமது ஒன்றிணைக்கப்பட்ட வணிக அணுகுமுறையில் திடமாக நின்று தனித்தன்மையில் உயர்ந்த ஸ்தானத்தை அடையும் எமது செயற்திட்டத்தை முன்னெடுப்பதில் உணர்ச்சிமிக்கதாய் உள்ளோம். நாம் கவனமாக இடர்நேர்கைகளை மதிப்பிட்டும் செயற்படும் வணிகச் சூழலில் பரந்து காணப்படும் சவால்களை வெற்றிகொள்வதற்கு கடினமாக முயற்சித்தோம். மூலோபாய திட்டமிடல் மற்றும் தீர்மானமான நடவடிக்கையுடன், நாம் திடமாக நின்று, எமது கூட்டாண்மை கோட்பாட்டினை நிலைநிறுத்தி, இதன் பலனாக புகழ்பரப்பும் விளைவிற்கு வழிசமைத்தது - இவ்வருட ஆண்டறிக்கையில் சிறப்பாக பிரதிபலிக்கும் ஓர் வெற்றி - ‘கடந்து வந்த 365 நாட்கள்’. பின்னோக்கிய பார்வையில் எனது மீளாய்வானது நாம் எவ்வாறு ஓர் வெற்றிகரமான வருடத்தைக் கொடுத்துள்ளோம் என்பதை நிலைநாட்டுகின்றது; எமது நீண்டகால இயலுமையை அடிக்கோடிட்டு மூன்று வரிசை மேடையினைக் கட்டியெழுப்ப முனையும் எமது இலட்சியப் பயணத்தை தொடங்குகின்றோம்.

### ஒருங்கிணைப்பு நோக்கி

எமது வணிக மூலோபாயமானது ஓர் முழுமையான மட்டத்தில் நிலைநிறுத்தக்கூடிய பெறுமதியினை உருவாக்குவதில் நன்கு முன்னிறுத்தப்பட்டு காணப்பட்டது. எமது பங்காளிகளுடனான உயரிய

ஈடுபாட்டுடன் நாம் இவ்வருடத்தில் எமது மூலோபாய முதன்மைகளை ஓர் மும்முனை அணுகுமுறையில் உருவமைப்பதற்கும் தெளிவாக்குவதற்கும் முனைந்தோம். இம்மும்முனையானது எமது கூட்டாண்மை பண்பு மற்றும் எமது இலக்குகள் என்பவற்றை பிரதிபலிக்கும் பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகப்புக்கூறல்கள் ஆகியனவாகும். நாம் பின்வருவனவற்றை கடைப்பிடிப்பதற்கு முயற்சிக்கின்றோம். எமது நாளாந்த செயற்பாட்டில் ஒழுக்கமாகவும் நேரடியாக ஈடுபடவும், மொத்த சாதனங்களைப் பரவலாக்குதல், செயல்முறைகளை மேம்படுத்துதல், இடர்நேர்கை முகாமைத்துவம் மற்றும் ஆளுகையினைப் பலப்படுத்துதல் மற்றும் ஊழியர்களது திறன் உற்பத்தி மட்டம் மற்றும் மனவுறுதி என்பவற்றை கட்டியெழுப்புதல் என்பனவாகும். நிறுவனத்தின் உள்ளேயும் நிறுவனத்திற்கு வெளியேயும் எமது சமூக கடப்பாட்டுப் பங்களிப்பில் நாம் அர்த்தமுள்ள விதத்திலும், நீடிப்புத்திறனைப் பொறுத்தளவில் பரந்த சூழலைக் கொண்ட சமூக மற்றும் சுற்றாடல் காரணிகளில் கவனஞ்செலுத்துவதற்கு முனைகின்றோம். எமது நாளாந்த செயல்முறையிலும் எமது முகாமைத்துவ மட்டத்திலான தீர்மானம் மேற்கொள்வதிலும் நாம் நெறிமுறையான வணிக நடைமுறைகளை நிலைநிறுத்துவதற்கு உயர்ந்த முன்னுரிமையை வழங்கினோம்.

### வணிக அமைப்பு

அறிக்கையிடப்படும் நிதியாண்டில் முக்கியமாக 2014 ஆம் ஆண்டின் இறுதிப் பாகத்தில் சமூக அரசியல் சவால்கள் காணப்பட்டபோதிலும், பாரியபொருளாதார சூழலானது முகாமைப்படுத்தப்பட்டு 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஓர் உயர்ந்த மொத்த உள்ளூர் உற்பத்தியினை எட்டக்கூடியதாயிருந்தது. நாணயக்கொள்கையானது தொடர்ந்தும் தாராளமயமாக்கப்பட்ட நிலைப்பாட்டினை கொண்டிருந்ததுடன், இது பதிவிடப்பட்ட ஆகக்குறைந்த, ஒற்றை இலக்க மட்டத்தில், வட்டிவீதத்திற்கும் பணவீக்கத்திற்கும் இட்டுச்சென்றது. இந்த வட்டி வீத சூழ்நிலையானது நிகர வட்டி இலாபம் குறைவடைவதற்கு காரணமாயிருந்தது. தனியார் துறை கடனுக்கான மந்தமான கேள்வியின் நிமித்தம் நிதிச் சந்தைகள் அதிக திரவத்தன்மை நிறைந்தவையாக இருந்தன. இவ்வணிகப் பின்னணியானது முற்றான நிதிச் சேவைகள் துறையில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தின.

கம்பனியினைப் பொறுத்தளவில், அரசியல் முன்னேற்றங்கள் ஆளுகை அங்கத்தில் மாற்றங்களைக் கொண்டுவந்ததுடன் அதன்பின்னர் பணிப்பாளர் சபையினை மறுசீரமைக்கும் தேவைப்பாடு எழுந்தது. ஆயினும், ஓர் குறுகிய காலத்தில் பணிப்பாளர் சபையானது இயங்காத போதிலும் நாம் திடமாக நின்று எமது நடவடிக்கைகளை விதிவிலக்காக சிறப்பாக முகாமைப்படுத்தினோம். பொருத்தமான கட்டுப்பாடுகளும் இருப்புகளுடனும் தீர்மானம் மேற்கொள்வதை உன்னிப்பாக கண்காணித்தும் செயற்பாடுகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தினோம்.

### செயற்பாட்டு விளைவு

முன்யோசனையுள்ள எமது முகாமைத்துவ நடைமுறைகளின் உறுதுணையுடன், கலப்புமிக்க வணிக சமிக்ஞைகளின் மத்தியில் நாம் எமது திட்டத்தை பின்பற்றி முதன்மையான செயற்பாட்டு மற்றும் நிதியியல் விளைவுகளுடன் இவ்வருடம் எமக்கு மிகவும் சிறந்த வருடமாகும்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது எமது கடனளிப்பானது 28 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து ரூபா 60 பில்லியனை விஞ்சியது. நாம் வட்டி வருமானத்தினை முன்னைய வருடத்தில் அடைந்த மட்டத்திற்கு சமீபமாக பராமரித்து ரூபா 19,247.62 மில்லியனை எட்டினோம். எவ்வாறாயினும், சிறந்த வட்டிவீதங்களை கோரக்கூடிய எமது ஆற்றலின் காரணமாக நாம் எமது நிதியத்தினது கிரயத்தின் உச்சவரம்பினை கணிசமான அளவு குறைக்கக்கூடியதாயிருந்தது. இது எமது தேறிய வட்டி வருமானம் ரூபா 10,000.03 மில்லியனை அடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 20.95 சதவீத வளர்ச்சியாகக் காணப்பட்டது. நிறுவனச் செலவுகள் உயர்வாகக் காணப்பட்டபோதிலும் எமது செயற்பாட்டு அளவின் காரணமாக மேல்வரிசை வளர்ச்சியானது வரிக்கு முந்திய இலாபம் ஓர் மெச்சத்தக்க 22.52 சதவீத வளர்ச்சியுடன் ரூபா 5,375.11 மில்லியனாக அதிகரிப்பதற்கு துணைபுரிந்தது. தேறிய இலாபமாக ரூபா 3,752.96 மில்லியன் பதிவுசெய்யப்பட்டது. உரித்துடைமையிலான விளைவு 18.61 சதவீதமாக பேணப்பட்டது. இது முன்னைய ஆண்டில் 16.79 சதவீதமாகக் காணப்பட்டது.

### கடன் தேக்கத்தின் தரம்

அறிக்கையிடும் வருடத்தில் நிதியியல் ஒழுங்குமுறையை நிலைநிறுத்துவதற்காக நாம் எமது நிலைமாறா அணுகுமுறையினை பராமரித்தோம். எமது முழுமையான அக்கறையாகக் காணப்பட்டது கடன் தேக்கத்தின் தரத்தை பேணுவதாகும். எமது நிறுவனத்தில் பரந்துள்ள செயற்பாட்டு அலகுகள் ஒன்றிணைந்து அவர்களது முகாமைத்துவத்தில் மிகவும் ஈடுபாட்டுடன் காணப்பட்டதுடன் பின்வருவனவற்றையும் மேற்கொண்டன. வாடிக்கையாளர்களுடனான பலமான உறவு, பயனுறுதிமிக்க இடர்நேர்கை முகாமைத்துவம், எம்மைப் போன்ற வணிக சூழலில் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தவறுதல்கள் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு கண்காணிப்புடன் நேரகாலத்துடனான நடவடிக்கைகள் என்பனவாகும். இந்த ஒற்றுமையான முயற்சியின் காரணமாக எமது வசூல் 90 சதவீதத்திற்கும் அதிகமாக காணப்பட்டதுடன் எமது செயற்திறனற்ற விகிதமானது 2.72 சதவீதமாக நின்றது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது அண்ணளவாக 25 சதவீதத்தால் உயர்வடையும் போக்கினைக் காட்டியபோதிலும் செயற்திறனற்ற விகிதமானது எமது இடர்நேர்கை தாங்குதிறன் நியமங்களுக்கு ஏற்ப காணப்பட்டதுடன் துறைசார் சராசரியான 6.9 சதவீதத்திலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டது. (வருடாந்த அறிக்கை 2014 - இலங்கை மத்திய வங்கி)

### நிதியளித்தல் மற்றும் நிதியியல் நிலைமை

அறிக்கையிடப்படும் வருடத்தில், வியாபித்திருக்கும் சந்தை சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமான மற்றும் எமது கூட்டாண்மை திட்டங்களை சந்திக்கக்கூடிய மற்றும் ஓர் திடமான நிதியியல் நிலைமைக்கு இயலுமைப்படுத்தும் ஓர் உன்னதமான நிதியியல் மூலோபாயத்தை கட்டமைப்பதற்கு நாம் முனைந்தோம். எமது அணுகுமுறையானது நிதியளிப்பதில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் முதிர்வு பொருத்தமின்மையைக் கட்டுப்படுத்தும் சரியான கலவையைக் கட்டமைப்பதற்கு முனைந்தது.

இவ்வருடத்தில் சந்தையானது குறைந்த வட்டி வீதங்களுடனும் உயர்ந்த மட்டத்திலான திரவத்தன்மையுடனும் பண்பிடப்பட்டது. இந்தத் தறுவாயில், இரண்டு சர்வதேச தரப்படுத்தல்களது உறுதுணையுடன் எமது வணிக அறிவுக்கூர்மையைப் பயன்படுத்தி, ஏனையவற்றுக்கிடையில், நிதி திரட்டுவதில் சில சிறந்த விதிகளை பேரம்பேசக்கூடியதாயிருந்தது. இது நிச்சயமாக அனேகமான எமது இணைநிலையினர்களுக்கும் பார்க்க ஓர் மெய்யான அனுகூலமாகும். எமது மூலோபாயமானது குறுங்கால மற்றும் நீண்ட கால நிதியங்களிடையே ஓர் ஆரோக்கியமான கலவையை வைத்திருப்பதாகும். நாம் அனேகமாக உள்ளூர் வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து நிலையான வட்டியை அடிப்படையாகக் கொண்ட நிதியளிப்பிற்கு முயற்சித்தோம். ஓர் தந்திரோபாயமான அசைவாக நாம் முதிர்வு பொருத்தமின்மையைக் குறைப்பதற்காக நிலையான வைப்புகளுக்கு எமது வெளிப்படுத்தலை கட்டுப்படுத்தினோம்.

குறைவான கிரய வைப்புகளைப் பெறுவதற்காக நாம் சிறுவர் சேமிப்பு உள்ளடங்களாக சேமிப்பினை திரட்டும் உத்வேகத்தை தொடர்ந்தோம். முன்னைய ஆண்டைப் போலவே எமது சந்தை சூழலில் வெளிநாட்டு நிதியளிப்பிற்கு முயற்சித்தல் தேவையற்றதாகக் காணப்பட்டது.

2015 மார்ச் 31 இல் நாம் விதிவிலக்கான திடமான நிதியியல் நிலைமையினை பராமரித்தோம். வங்கியல்லாத நிதி நிறுவனங்களது துறையினுள் அதிகளவு சொத்து மட்டமான ரூபா 100 பில்லியனை நாம் கொண்டிருந்ததுடன் வங்கித் துறையினுள் காணப்படும் சில வங்கிகளுக்கு சமமாகவும் இது காணப்பட்டது. எமது மொத்த கடன் தேக்கமானது வருடத்தின் இறுதியில் ரூபா 98,411.20 மில்லியனை எட்டியதுடன் பங்குதாரர் நிதியங்கள் சாத்தியமாகவும் திடமாகவும் காணப்பட்டது. மூலதனப் போதுமை விகிதாசாரமானது சென்ற ஆண்டை ஒத்ததாகக் காணப்பட்டதுடன் இது முறைமைப்படுத்தல் வழிகாட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த மட்டத்திலும் பார்க்க அதிகமாகக் காணப்படுகின்றது. இது எமது பேராவலான வளர்ச்சி இலக்குகள், கடன் யோக்கியதை மற்றும் கடன்தீர் ஆற்றல் என்பவற்றை செல்லுபடியாக்கும் எமது ஆற்றலுக்கு வழிசமைக்கின்றது.

### ஒன்றுதிரட்டப்பட்ட விளைவுகள்

மீளாய்வாண்டில் எமது ஒன்றுதிரட்டப்பட்ட விளைவுகள் பி.எல்.சி. குழுமத்தின் பலத்துக்கு ஓர் ஒப்பந்த உறுதியாக காணப்பட்டது. திரளாக்கப்பட்ட வருமானமானது ரூபா 23,578.87 மில்லியனுடன் ஓர் திடமான செயற்திறனை பதிவுசெய்தது. எமது துணைக்கம்பனிகளில் பீபள்ஸ் இன்சூரன்ஸ் ஒன்றுதிரட்டப்பட்ட வருமானத்திற்கு அதிகளவு பங்களிப்பு செய்ததுடன் அதற்கு அடுத்ததாக பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பட்டி டெவலப்மன்ட் லிமிட்டட் காணப்பட்டது. வரிக்கு முந்திய இலாபமானது ரூபா 5,887.42 மில்லியனாகக் காணப்பட்டதுடன் வரிக்கு பிந்திய தேறிய இலாபமானது 18.43 சதவீத வளர்ச்சியுடன் பலமாகக் காணப்பட்டது. குழுமத்தின் உரித்துடைமையிலான விளைவு முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 18.22 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 19.61 சதவீதத்தை எட்டியது.

பி.எல்.சி குழுமமானது வருடத்தின் இறுதியில் ஓர் ஆரோக்கியமான நிதி நிலைமையினை நிலைநிறுத்தி அதன் தேறிய சொத்துக்கள் 11.56 சதவீத வளர்ச்சியுடன் ரூபா 22.05 பில்லியனை எட்டியது. சொத்துக்களிலான விளைவு 5 சதவீதத்தை எட்டியது.

### வெளித்தோன்றும் துணைக்கம்பனிகள்

எமது வணிக மூலோபாயமானது எமது கூட்டாண்மை குறிக்கோளுக்கு துணைபுரியக்கூடிய மிகவும் பொருத்தமான சிறந்த துணைக்கம்பனிகளை கட்டியெழுப்புவதாகும். நீண்ட காலப் பெறுமதியினை உருவாக்கும் அவற்றின் முயற்சிகளுக்கு நாம் ஈடுபாட்டுடன் வழிநடத்தி உறுதுணையாய் இருந்தோம். எமது புகழ், குறியீட்டு பலம், நிதியியல் சூழ்ச்சித்திறன் மற்றும் வலையமைப்பு என்பவற்றுடன் எமது துணைக்கம்பனிகள் உயர்ந்த மட்டத்தை எட்டுவதற்கு நாம் ஓர் திடமான பணித்தளத்தை நீட்டக்கூடியதாயிருந்தது. அத்துடன் இதன் மூலம் பின்வருவனவற்றுக்கு இயலுமையூட்டக்கூடியதாகவுமிருந்தது. மேலும் முன்னேற்றங்களை மேற்கொள்ளல், அவர்களது தொழிற்பாட்டு செயல்முறைக்கு புத்தாக்கத்தை கொண்டுவருதல், இணைதிறனை வலுப்படுத்தல், சந்தை வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ளல், வணிகத்தில் சிறந்த மற்றும் நடைமுறையான பழக்கங்களை கடைப்பிடித்தல் என்பனவாகும். இதன் காரணமாக இவ்வருடத்தில் வெளிக்காட்டியவாறு எமது துணைக்கம்பனிகள் குறிப்பிடத்தக்க உயர்வரிசை விளைவுகளை எட்டக்கூடியதாயிருந்தது.

### காப்புறுதி உயர்ந்த அடுக்குகளின் மத்தியில்

எமது தலைமை துணைக்கம்பனியான, பீபள்ஸ் இன்சூரன்ஸ் மீண்டும் ஒருமுறை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக ஆயுள் காப்புறுதியற்ற நிறுவனங்களில் உயர்ந்த அடுக்கினை நிலைநிறுத்திக்கொண்டது. மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த இத்துறையில் ஐந்தாவதாக தரவரிசைப்படுத்தப்பட்டது. இவ்வருடத்தில் விரைவாக மாற்றமடையும் வணிகப் பின்னணியின் மத்தியிலும் பீபள்ஸ் இன்சூரன்ஸ் திடமாக நின்று துறைசார் சராசரியிலும் பார்க்க அதிகளவில் அதன் காப்பீட்டுத் தவணைத்தொகையானது வளர்ச்சியடைந்தது. ஏனைய காப்புறுதி நிறுவனங்களிலிருந்து வேறுபட்டு முதன்மையான காப்பீட்டு இலாபமாக ரூபா 176.70 மில்லியனை பதிவுசெய்தது.

நிதானமான முன்னேற்றத்துடன், பீபள்ஸ் இன்சூரன்ஸ் மாற்றமடையும் முறைமைப்படுத்தல் கட்டமைப்பினுள் நிகழப்போகின்ற நிலைமாற்றத்தினை சந்திப்பதற்கு ஆயத்தமாகின்றது. 2015 ஆம் ஆண்டின் இறுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் முன்மொழியப்பட்ட பட்டியலிடல் இடம்பெறப் போகின்றது. கட்டாயத் தேவைப்பாடான இடர்நேர்கை அடிப்படையான மூலதன மாதிரியானது 2016 இல் அமுல்படுத்தப்படும். தற்போது ஓர் மூலோபாய வெளிநாட்டு காப்புறுதிப் பங்காளியுடன் இணைவதற்கான முயற்சிகள் நடந்தவண்ணமுள்ளன. இது இத்துணைக்கம்பனிக்கு அதன் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்கும், மிகவும் சக்திமிக்க சாதனங்களுக்கான அறிவு, முறைகள் மற்றும் செயல்முறைகள் என்பவற்றுக்கு துணைபுரியும்.

### பன்னூர்தி முகாமைத்துவத்தினை பலப்படுத்தல்

கூட்டுவிளைவுகளின் பலத்தை வெளிப்படுத்தும் விதத்தில் நாம் எமது பன்னூர்தி முகாமைத்துவ அங்கத்திற்கு முன்னேற்றங்களை மேற்கொண்டு சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் விளைவுகள் நோக்கி நகர்ந்தோம். குழுமத்திற்கான அதன் பன்னூர்தி சேவைகளை வலுப்படுத்தும் அதேவேளை இவ்வருடத்தில் இத்துணைக்கம்பனியானது பெறுமதியிடல் திணைக்களத்தில் அதன் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்கு முனைந்தது. இது பி.எல்.சி. மற்றும் பீபள்ஸ் இன்சூரன்ஸ் என்பவற்றின் உரிமை கோரல் முகாமைத்துவ செயல்முறையில் சிறந்த ஈடுபாட்டிற்கு வசதியளித்தது. முதலாம் முறையாக, சமீபத்தைய வருடங்களில் தொழிற்பாட்டினை சீரமைத்ததன் பின்னர் பீபள்ஸ் லீசிங் விலீட் மெனேஜ்மன்ட் எமது முதலீட்டிற்கு ஓர் பங்கிலாபத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தது.

### அடிமட்டங்களை அடைதல்

ஓர் உள்ளடக்கப்பட்ட மற்றும் பொறுப்புள்ள வணிகமாக மாறுவதற்கான எமது அணுகுமுறைக்கான எமது கடப்பாட்டினை தெரிவிக்கும் விதமாக எமது நுண்கடனளித்தல் முயற்சியானது அதன் தொழிற்பாட்டு முறைகள், செயலாக்கம் மற்றும் செயல்முறைகள் என்பவற்றை திடப்படுத்தி அடிமட்ட சமூகத்தினரிடையே நுண்கடன் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு முனைந்தது. இதன் மூலம் அவர்களது சமூக பொருளாதார நிலைமையினை மேம்படுத்துவதற்கு வசதியளிக்க முடியும். பீபள்ஸ் மைக்ரோவைனான்ஸ் ஆரம்பித்து நான்கு வருடங்களில் கணிசமான அளவு வாடிக்கையாளர் தளத்தை, முக்கியமாக பெண்கள் உள்ளடங்களாக கட்டியெழுப்பக் கூடியதாயிருந்தது. பெண்கள் குடும்பத்தின் முக்கிய பங்கை வகிப்பதுடன் சிறந்த சிக்கன மற்றும் பொறுப்புணர்வுடன் செயல்படுவதுடன் அடுத்த சந்ததிக்கு செல்வாக்கு செலுத்தும் முக்கிய காரணியாகவும் உள்ளார்கள். அறிக்கையிடப்படும் வருடத்தில் நுண்கடன் தேக்கமானது ரூபா 1 பில்லியனை எட்டியது.

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

### சொத்துடைமை அபிவிருத்தி

எமது சொத்துடைமை அபிவிருத்தி முயற்சிகள் படிப்படியாக முன்னேற்றமடைந்து பி.எல்.சி குழுமத்தில் அதன் பிரசன்னத்தை நிலைநாட்டி மீளாய்வாண்டில் முன்னோக்கிச் சென்றது. பீபள்ஸ் லீசிங் ப்ரொப்பட்டி டெவலப்மன்ட் ஓர் ஆரோக்கியமான விளைவினை பதிவுசெய்து ரூபா 11 மில்லியன் பங்கிலாபத்தை வழங்கியது. அது எமது தாய்க் கம்பனியான மக்கள் வங்கிக்கு அதன் வவுனியா கிளை இரண்டாம் கட்ட திட்டத்தின் கட்டுமாணங்களை நிறைவுசெய்து கையளித்தது. மேலும் ஆறு திட்டங்கள் தற்போது வந்தவண்ணமுள்ளன.

பீபள்ஸ் லீசிங் ஹெவ்லொக் ப்ரொபட்டீஸ், எமது முதலீட்டுச் சபை முயற்சியானது கொழும்பு 5 இல் எமது உத்தேசித்த அலுவலக வளாகத்தின் கட்டுமாணத்துடன் பலமான முன்னேற்றத்தை அடைந்தது. அதற்கு அடுத்தாற்போல் காணப்பட்ட 72.25 பேர்ச்சர்ஸ் நிலத்தினை கொள்வனவு செய்து அதன் வரையெல்லையை மாற்றி உத்தேசித்த கட்டிட வளாகத்தினை விஸ்தரித்துள்ளது. இதற்காக மதிப்பிடப்பட்ட கிரய அதிகரிப்பு 29.53 சதவீதமாவதுடன் இத்திட்டமானது 2016 மே இல் நிறைவுறுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், முன்னைய வருடத்தில் அறிக்கையிடப்பட்ட நகர அபிவிருத்தி சபையுடன் கூட்டிணைந்து யாழ்ப்பாணத்தில் உருவாக்கவிருந்த 30 அறைகளைக் கொண்ட விருந்தினர் விடுதித்திட்டமானது எதிர்பார்த்தவாறு நிறைவேறவில்லை. இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தற்போதைய நேரம் உகந்ததல்ல எனவும் இது எமது மத்திய நீண்ட கால திட்டங்களில் பின்னர் உள்ளடக்கப்படலாம் என நாம் நம்புகின்றோம்.

### பரந்த வெளிக்கள மற்றும் விளைபொருள் கோவை

எமது பரந்த விநியோகக் கால்வாய்கள் நாடு பூராவுமுள்ள, சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய பிரதேசங்கள் உள்ளடங்களாக பரவலான வாடிக்கையாளர்களை அணுகி சேவையாற்றுவதற்கு எமக்கு இயலுமையாக்கியது. முக்கியமான இடங்களில் நிறுவப்பட்ட நான்கு புதிய கிளைகள் உள்ளடங்களாக வருடத்தின் இறுதியில் எமது கிளைகளின் எண்ணிக்கை 89 ஆகவும் இடை செயற்பாடுகள் 109 ஆகவும் காணப்பட்டன.

குத்தகை மற்றும் நிதியியலில் எமது முக்கியமான நிபுணத்துவத்துடன் கம்பனியினது சேவைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கின. கடன்கள், இஸ்லாமிய நிதியளித்தல் மற்றும் வைப்புகள், துணைக்கம்பனி சேவைகளான காப்புறுதி, பன்னூர்தி முகாமைத்துவம், வாகன பெறுமதியிடல்கள் மற்றும் நுண்கடனளிப்பு என்பவற்றுடன் பல்வேறு வகையான வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு ஓர் மொத்த தீர்வினை அளிக்கக்கூடியதாயிருந்தது. மேலும் புதுமைகளை புகுத்துவது மற்றும் பெறுமதி சேர்ப்பதில் நாம் செயல்திறனுடன் தனிப்பட்ட வாடிக்கையாளர்களது தேவைப்பாடுகளுக்கு பொருத்தமான விளைபொருள்களை ஒன்றுதிரட்டி குறுக்கு விற்பனையை மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது. எமது புதிய விளைபொருள் வீச்சினை பலப்படுத்துவதற்கு நாம் முக்கியமாக எல்லைக் கடன் வர்த்தகத்தினை சிறந்த முறைகள், செயலாக்கங்கள் மற்றும் குழுவுடன் அபிவிருத்தி செய்வதற்கு முயற்சித்தோம்.

### வாடிக்கையாளர் நெறிப்படுத்தல்

ஓர் ஆகக்குறைந்த வீச்செல்லை இலக்கான 10 முதல் 15 சதவீதம் வரையான மேல்வரிசை வளர்ச்சியினை அடையும்முகமாக நாம் இவ்வருடத்தில் எமது வாடிக்கையாளர் மையமுடைய அணுகுமுறையை தொழில்சார் நிபுணத்துவத்துடனும் பொறுப்புடனும் மேற்கொள்வதற்கு தீர்மானித்தோம். நாம் பின்வருமாறு அவர்களுடனான எமது இணைப்பை மேம்படுத்துவதற்கு முயற்சித்தோம். கிளை மட்டங்களில் ஒழுங்குசெய்யப்பட்ட தனிப்பயன் நிகழ்வுகளில் தொடர்பாடல், விசுவாசத்திற்கு வெகுமதியளித்தல் மற்றும் சிறந்த சேவைகளை வழங்குதல் என்பவற்றுடன் ஊழியர்கள் பயிற்றுவிப்பு, முறைகள் மற்றும் செயல்முறைகளில் தேவையான முதலீடுகள் என்பனவாகும். இதன் மூலம் ஒத்துணர்வுத்தன்மை, வினைத்திறம் மற்றும் விரைவான செயலாக்கம் என்பனவற்றை இயலுமையாக்கலாம். இந்த முயற்சிகளின் விளைவாக வாடிக்கையாளர் தளத்தில் 19.78 சதவீத வளரச்சியுடன் 260,054 இனை அடைந்து எமது சந்தை பங்களிப்பு வளர்ச்சியடைவதற்கு உறுதுணை புரிந்தது. குத்தகைத் துறையில் எமது நிலையினை தொடர்ச்சியாக 13 வருடமாக முன்னணியில் தக்கவைத்ததுடன் வங்கியல்லாத நிதியியல் சேவைகள் துறையில் எமது ஆதிக்கத்தை பராமரிக்கக்கூடியதாயிருந்தது.

### ஊழியர்களை ஈடுபடுத்தி அதிகாரமளித்தல்

எமது கூட்டாண்மை மூலோபாயத்தில் ஊழியர்களது ஈடுபாடு முதன்மையாகக் காணப்பட்டது. அதிகாரமளிக்கப்பட்ட மற்றும் திறன், செயலூக்கம், மற்றும் நெறிமுறையான விழுமங்கள் ஆகிய பண்புகளைக் கொண்ட ஊழியர்களே இதுவரைக்குமான எமது அருந்திறச் செயற்பாட்டுக்கு சாராம்சமாக உள்ளார்கள் என்ற எமது நம்பிக்கையில் நாம் நிலைத்திருந்ததுடன் எமது குழுமத்தின் முன்னோக்கிய பயணத்திற்கு மூலைக்கல்லாக இருப்பார்கள். இதன் காரணமாக நாம் எமது ஊழியர்களுடன் ஈடுபட்டு, அவர்களது தனித்துவத்திற்கு மதிப்பளித்து, அவர்களது கொள்திறனை கட்டியெழுப்பி, அவர்களது தொழில்துறையை விருத்திசெய்வதற்கு உதவி அவர்களது ஒட்டுமொத்த நல்வாழ்வினை உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றோம்.

இவ்வருடத்தில் நாம் தலைமைக் காரியாலயம் முதல் கிளைகள் வரையான நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளிலிருந்தும் ஊழியர்களை பயிற்றுவிப்பதற்காக ரூபா 26.76 மில்லியனை முதலீடு செய்தோம். சில நிகழ்ச்சித்திட்டங்கள் எமது கூட்டாண்மை இலக்குகளுக்கு ஏற்ப நன்கு மதிப்பிடப்பட்ட திறன் இடைவெளிகளை நிரப்புவதற்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டிருந்தன. எமது ஊழியர்கள் அவர்களது தொழில்சார் கற்கையினை மேம்படுத்துவதற்கு நாம் தொடர்ச்சியாக ஊக்கமளித்தோம். அவர்களுக்கு எமது விரிவான செலவீட்டுத்திட்டத்தினது பயன்பாட்டினை கிடைக்கச்செய்து எமது நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரசித்திபெற்ற பயிற்றுனர்கள் மற்றம் நிறுவனங்களில் வாய்ப்பினை வழங்குதல் ஆகும்.

எமது செயற்திறன் அடிப்படையான தொழில் சூழலைப் பேணுவதற்கு நாம் திடமாக இருந்தோம். எமது கூட்டாண்மை விழுமங்களான சமத்துவத்தினை வளர்த்தும் நிலைநிறுத்தியும் நாம் ஓர் நன்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் வெளிப்படையான மதிப்பீட்டு திட்டத்தினூடாக எமது அனைத்து ஊழியர்களும் அவர்களது செயற்திறன் இலக்குகளை எட்டுவதற்கு முயற்சித்தோம். நாம் எமது சிறந்த செயற்திறனாளர்களையும் சிறந்த கிளைகளையும் வருடாந்த கிளைகளிடையேயான போட்டியில் அங்கீகரித்தோம். இந்த வருடத்தில் கிளைகள், ஜன்னல் வலையமைப்புகள் மற்றும் தலைமைக் காரியாலயம் ஆகியவற்றிலிருந்து 50 ஊழியர்களுக்கும் அதிகமானவர்களது சாதனைகளை நாம் கொண்டாடினோம்.

### சமூக பொறுப்புணர்வு - 'நாம் அக்கறை கொண்டுள்ளோம்'

அறிக்கையிடப்படும் வருடத்தில், சமூக பொறுப்புணர்வு முன்னெடுப்புகள் மற்றும் திட்டங்களை மேற்கொள்வதற்காக நன்கு சிந்தித்து உருவாக்கப்பட்ட ஓர் திட்டத்தினைப் பின்பற்றுவதற்கு

நாம் கடப்பாடுடன் இருந்தோம். நாம் செயற்படும் சமூகங்களை எவ்வாறு சிறப்பாக எட்டலாம் என்றும், எமது கரிம அடிச்சுவட்டினை உறுதிசெய்தல் மற்றும் ஓர் பசுமையான சூழலை நோக்கி நாம் கடைப்பிடிக்கவேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றிலும் கவனஞ் செலுத்தினோம்.

எமது கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு குழுவானது தலைமைக் காரியாலயம் மற்றும் கிளைகளிலிருந்து தொண்டார்வ ஊழியர்களுடன் ஒன்றிணைந்து ஓர் மூலோபாய பிரச்சாரமான "நாம் அக்கறை கொண்டுள்ளோம்" என்பதை மெச்சத்தக்க வகையில் கட்டமைத்தார்கள். இது சூழல் பேணுகை, தொழில்முனைவுத் திறனை கட்டியெழுப்புதல் மற்றும் நிதியியில் கல்வியறிவை கற்பித்தல், கல்வி மட்டத்தினை தரமுயர்த்துதல், வீதி ஒழுக்கங்களை ஊக்குவித்தல் மற்றும் ஏனைய சமூக முன்னுரிமைகளுக்கு உதவிக்கரம் நீட்டல் போன்ற பிரிவுகளை உள்ளடக்கும். இந்தப் பிரச்சாரத்தில், நாம் ரூபா 70 மில்லியன் மொத்த முதலீட்டுடன் 132 திட்டங்களை 10,546 தொண்டார்வ மணித்தியாலங்களுடன் நடைமுறைப்படுத்தினோம்.

### தனிச்சிறப்புக்கான அங்கீகாரம்

18 வருடக் காலப்பகுதியில் நாம் ஓர் முன்மாதிரியான நிறுவனமாக வெளித்தோன்றியுள்ளோம். இது சமூக உணர்வுநிலை மற்றும் பொறுப்புணர்வு என்பவற்றுடன் ஒன்றிணைக்கப்பட்ட மூலோபாயங்களில் எமது கூட்டாண்மை பயணம் செதுக்கப்பட்டதனாலாகும். மெய்யாகவே, பல வருடங்களாக நாம் பெற்றுக்கொண்ட விருதுகள் எமது வணிக மதிநுட்பத்திற்காக உள்ளூ ரிலும் சர்வதேசத்திலும் நாம் அடைந்த அங்கீகாரங்கள், முன்னேற்றமடையும் முன்னெடுப்புகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பன துறையினுள் உன்னத நிலையினை அடைவதற்கான எமது உத்வேகங்களாகும்.

நாட்டின் வங்கியியலல்லாத நிதியியல் துறையில் இரண்டு சர்வதேச தரப்படுத்தல்களைக் கொண்ட ஒரே நிறுவனமாக நாம் தொடர்ந்தும் இருக்கின்றோம். சர்வதேச விச் தரப்படுத்தல் நிறுவனத்திடமிருந்து - '**B+**' தரத்தையும், இது அரசாங்க தரத்திலிருந்து ஒரு படி இறங்கியும், ஸ்டான்டர்ட் அன்ட் புவரிடமிருந்து - '**B+/B**' தரத்தையும், இது அரசாங்க தரத்திற்கு ஒத்ததாகக் காணப்படுகின்றது. விச் ரேட்டிங்ஸ் லங்கா இத்துறையிலேயே பெற்றுக்கொள்ளப்பட்ட உயர்ந்த தரப்படுத்தலான '**AA-**' தரத்தினை பி.எல்.சி. க்கு வழங்கியுள்ளது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் காணப்படும் எஸ். அன்ட் பி. ஸ்ரீலங்கா 20 சுட்டியினுள் உள்ளடக்கப்படுவதற்கு தெரிவுசெய்யப்பட்டது எமது சிறுப்புரிமையாகும். இருபது பாரிய முதனிலை கம்பனிகளுள் எமது கம்பனியும் ஒன்றாகத் திகழ்வது நிச்சயமாக எமது நிதியியல் திறமை மற்றும் இந்நாட்டின் வணிக செயற்களத்தில் எமது மதிப்பு என்பவற்றை மேலும் நிலைநிறுத்தியுள்ளது. பூரணப்படுத்துவதற்காக, **SLIM** நீல்சன் மக்களது விருதுகள் 2014 இல் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக மக்களது தெரிவான "ஆண்டிற்கான நிதியியல் சேவை வழங்குனர்" ஆக எமது பட்டத்தை தக்கவைத்துக்கொள்ளக் கூடியதாயிருந்தது.

அதற்கேற்ப, இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் தெரிவு செய்யப்பட்ட "பத்து சிறந்த கூட்டாண்மை பிரஜைகளுக்குள்" எம்மையும் உள்ளடக்கியது பாராட்டுக்குரியதாகும். இது நாம் எமது தொழிற்பாட்டில் நீடிப்புத்திறனின் முகப்புக்கூறுகளை தழுவுவதை நோக்கி மேற்கொண்ட செயல்திறனான நடவடிக்கைகள் மற்றும் எமது கடப்பாடு என்பவற்றை இனங்கண்டு தெரிவுசெய்யப்பட்டதாகும். நாம் இலங்கை தேசிய சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட '**CNCI** கைத்தொழில் தனிச்சிறப்பு சாதனையாளர் விருது - 2014' இல் இரண்டு தங்க விருதுகளையும், இலங்கையின் தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய வணிக தனிச்சிறப்பு விருதுகள் 2014 இல் ஓர் வெள்ளி விருதினையும் பெற்றோம். இலங்கை பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'மக்களது அபிவிருத்தி விருதுகள் 2014' இல் எமது ஊழியர் அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்காக ஓர் வெள்ளி விருது பரிந்துரைக்கப்பட்டது. ஷாரியா வழிகாட்டிகளுக்கு அமைவாக இஸ்லாமிய நிதியியல் செயற்பாட்டின் கீழ் எமது உள்ளடக்கப்பட்ட அணுகுமுறை மற்றும் முன்னெடுப்புகளை இலங்கை இஸ்லாமிய வங்கியியல் மற்றும் நிதியியல் துறை விருதுகளும் அங்கீகரித்தது.

### அறிக்கையிடும் நியமங்களில் உச்சநிலைப்பாடு

எமது அறிக்கையிடும் முன்னெடுப்புகளுக்கு தரம் மற்றும் நியமங்களை கொண்டுவருவதற்கு இவ்வருடத்தில் மேலும் தொடர்ந்தோம். உலகளாவிய அறிக்கையிடல் முன்னெடுப்புகளின் நவீன நியமங்களுடன் ஒருங்கிணைத்து அறிக்கையிடும் செயல்முறையினை பலப்படுத்துவதற்கு நாம் திடமான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இது எமது வணிக அணுகுமுறை, செயற்திறன் மற்றும் எதிர்கால திட்டங்கள் என்பவற்றை நீடிப்புத்திறன் முகப்புக்கூறுகள் மற்றும் குறுங்கால நோக்கிலிருந்து அப்பால் நகர்தல் என்பவற்றுடன் சேர்த்து தெளிவுபடுத்துவதற்கு முனைந்தோம்.

இந்த முயற்சிகள் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இலட்சியங்களை நிலைநிறுத்துவதற்கான எமது உணர்வு மற்றும் வேட்கையை பிரதிபலித்தன. இது இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட 50 ஆவது ஆண்டறிக்கை விருதுகள் 2014 இல் 'மக்களின் தெரிவு' என்ற கருப்பொருளில் தயாரிக்கப்பட்ட எமது 2013/2014 ஆண்டறிக்கையானது அங்கீகரிக்கப்பட்டு மூன்று ஆவல்மிக்க விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விருதுகளது வரலாற்றில் "வருடாந்த நிதியியல் அறிக்கையிடல் ஒட்டுமொத்த தனிச்சிறப்புக்கான" வெள்ளி விருதினைப் பெற்ற முதலாவது வங்கியல்லாத நிதியியல் நிறுவனமாக நாம் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டோம். கூட்டாண்மை சமூக பொறுப்புக்கூறல் அறிக்கையிடலுக்கு 'தங்க விருது' வழங்கப்பட்டு தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாக 'நிதியியல் துறையில் சிறந்த ஆண்டறிக்கைக்கான' தங்க விருதினை நாம் தக்கவைத்துக்கொண்டோம். இதனை மேலும் முழுமையாக்கும் விதத்தில் 2014 கவனயீர்ப்பு விருதுகளில் அமெரிக்க தொடர்பாடல் தொழில்வல்லுனர்களது சங்கத்தினால் எமது 2013/2014 ஆண்டறிக்கைக்கு இரண்டு விருதுகள் வழங்கி பாராட்டப்பட்டது. எமது அறிக்கையானது முதலாவது நூறு அறிக்கைகளில் 26 ஆவது இடத்தைப் பிடித்தது. இது முன்னைய வருடத்தில் காணப்பட்ட 36 ஆவது இடத்திலிருந்து பத்து படிகள் முன்னேற்றமாகும். தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கை விருதுகள் 2014 இல் எமது ஆண்டறிக்கையும் பாராட்டினைப் பெற்றது.

### அபிலாஷை மற்றும் திட்டங்கள்

நாம் ஓர் முரண்பாடான வணிகச் சூழலில் செயற்படுகின்றோம் - சவால்கள் நிறைந்த, ஆனால் நன்னம்பிக்கையுடைய கிளர்ச்சியூட்டும் வாய்ப்புக்களுடன். தலைமைத்துவ நிலையிலிருந்து, வாய்ப்புக்களை பயன்படுத்தவும் சவால்களுக்கு எதிராக திடமாக செயற்படவும் எமது நிறுவனத்தை இயக்குவதற்கான சக்தி எம்மிடமுள்ளது.

ஒன்றிணைக்கப்பட்ட வணிக அணுகுமுறையில் உருவாக்கப்பட்ட எமது கூட்டாண்மை திட்டமானது அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு எமது மூலோபாய முதன்மைகளை தெளிவுபடுத்தியுள்ளன. உயர்வரிசை

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

இலக்கான 20 சதவீத வளர்ச்சி மற்றும் கூட்டிணைக்கப்பட்ட அடிப்படையில் 25 சதவீத வளர்ச்சி என்பவற்றுடன், நாம் எமது விநியோக வாய்க்கால்களை மேலும் ஒன்றிணைக்கக்கூடிய எமது சந்தைப் பிரிவுகள் மற்றும் வெளிக்களத்தை வளர்ப்பதற்கு நாம் கவனஞ்செலுத்தவுள்ளோம். அடுத்த மூன்று வருடங்களில் மேலும் சில புதிய கிளைகளை சேர்ப்பதற்கு நாம் உத்தேசித்துள்ளதுடன், அதிகளவில் எமது குறைந்த கிரயத்துடனான இடைநிலை செயற்பாடுகளை பலப்படுத்தவும் உள்ளோம். நான்கு பிராந்திய தலைமைத்துவத்தின் கீழ் நிர்வாக செயற்பாட்டினை பரவலாக்க திட்டமிட்டுள்ளோம். எம்மைப் போன்ற விரைவாக வளர்ச்சியடையும் நிறுவனத்திற்கு பொருத்தமானதாக பயனுறுதிமிக்க மூலோபாய அமுல்படுத்தல் மற்றும் கிரய சீரமைப்பினை இயலுமையாக்குவதற்கு கிளைகள் கொத்து அடிப்படையில் முகாமைப்படுத்தப்படுகின்றன. எமது பன்முகப்படுத்தல் முன்னெடுப்புகளில் நாம் தொடர்ச்சியாக நம்பிக்கையுடன் இருக்கின்றோம், முக்கியமாக எல்லைக்கடன் வர்த்தகத்தில் கவனஞ்செலுத்தியும் ஓர் புதிய சாதனமாக வருமதி கணக்குகளை கொள்வனவு செய்யும் வணிகத்தில் ஈடுபடவும் முயற்சிக்கின்றோம். எமது குறியீட்டின் பிரசன்னத்தை முனைப்புடனான குறியீட்டு பிரச்சாராங்களுடன் கட்டியெழுப்புவதற்கு நாம் திட்டமிட்டுள்ளதுடன் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களை கவர்வதற்கான வணிக அபிவிருத்தி முன்னெடுப்புகளிலும் ஈடுபடவுள்ளோம். நாம் எமது துணைக்கம்பனிகளை உற்சாகப்படுத்துவதற்கான மிகவும் உச்சநிலையான உறுதுணைகளை வழங்கி அவற்றை செயற்பாட்டு ரீதியில் பயனுறுதி மிக்கதாகவும் எமது கூட்டு இலக்குகளை சந்திப்பதற்கு வெற்றிகரமாக ஒன்றுபட்டு செயற்படுவதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

உயர்வரிசை முன்னெடுப்புகளுக்கு அப்பால் எமது கடன்தேக்கத்தின் தரத்தை முகாமைப்படுத்துவதில் விவேகமாக காணப்படுவதற்கு கடப்பாடுடையவர்களாய் நாம் உள்ளோம். நாம் பயனுறுதிமிக்க நிதியளித்தல் மூலோபாயங்களை கடைப்பிடிப்பதற்கும், சந்தை இயக்கத்திற்கு பதிலளிக்கும் வண்ணமும் அதனூடாக எமது நிதியியல் நிலைமையினை பலப்படுத்தவும் முனைவோம். எதிர்வரும் வருடங்களில் இடர்நேர்கை மற்றும் இணக்கப்பாட்டு முகாமைத்துவம் என்பன நிச்சயமாக முக்கியமான பங்கு வகிக்கும். உனது வாடிக்கையாளரை தெரிந்துகொள் கொள்கைகளை நிலைநிறுத்தவும் பணம் சலவை செய்தல் மற்றும் போட்டித்தன்மைக்கு எதிரான நடத்தைகள் என்பவற்றை கட்டுப்படுத்தவும் சிறந்த முறைகள் உள்ளடங்களான எமது நெறிமுறையான வணிக நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு முன்னிறுத்தப்பட்ட செயல்முறைகள் கடைப்பிடிக்கப்படும். நாம் எமது சமூக பொறுப்புடைமை திட்டமான "நாம் அக்கறை கொண்டுள்ளோம்" என்பதை அடுத்த மட்டத்திற்கு கொண்டுசெல்வதற்கு எண்ணியுள்ளோம். பங்காளிகளது பேரார்வத்திற்கு பதிலளிக்கும் அதேசமயம் எமது செய்கைக்கு மூலோபாயமான முன்னெடுப்புகளில் உயரிய அழுத்தத்தை பிரயோகிக்கவும் உள்ளோம்.

மத்திய நீண்ட காலப்பகுதியில் எமது திட்டங்கள் நாட்டின் எல்லைகளுக்கு அப்பால், முக்கியமாக தெற்காசிய பிராந்தியத்திற்குள் நகர்வதற்கு முனைகின்றன.


### பாராட்டுக்கள்

'கடந்து வந்த 365 நாட்கள்' என்பதில் எனது மீளாய்வினை நிறைவுசெய்யும்வேளை எமது கூட்டாண்மை செயற்பணியினை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு ஒவ்வொரு பங்காளியினதும் பங்களிப்பு பற்றி நான் ஆழமாக அறிந்துள்ளேன். மிகவும் சோதனையான காலப்பகுதியின் மத்தியிலும் எமது இலக்குகளை அடைவதற்கு பரிந்துசெயலாற்றுவதற்கு அவர்களது தன்னம்பிக்கை, நம்பிக்கை மற்றும் தாராளமாக உறுதுணை அளித்தமைக்காக நான் மெய்யாகவே நன்றியுடையவனாய் உள்ளேன்.

எமது புதிய தலைவரையும் பணிப்பாளர் சபையினையும் வரவேற்கும் வேளையில், அவர்களது குறிக்கோள்மிக்க எண்ணம் மற்றும் தலைமைத்துவத்தினை எதிர்பார்த்துள்ளேன். எமது முன்னைய பணிப்பாளர் சபைக்கும் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கும் அவர்களது பங்களிப்பு மற்றும் வழிகாட்டலுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும். நான் இந்த சந்தர்ப்பத்தில் பி.எல்.சி. மற்றும் அதன் துணைக் கம்பனிகளிலுள்ள முதன்மையான அணியினருக்கு எனது ஆழமான பாராட்டுக்களை தெரிவிப்பதனை எனது சிறப்புரிமையாக கருதுகின்றேன். இவ்வருடத்திற்கான மூலோபாய இலக்குகளை அடைவதற்கு அவர்களது வீரியம், கூட்டு முயற்சி மற்றும் ஆர்வம் ஆகியவை எனது மனதில் பதியத்தக்கதாயுள்ளது. ஓர் திறம்பட செய்யப்பட்ட தொழில் - அவர்கள் தொடர்ந்தும் திடமாக நின்று பி.எல்.சி. குழுமத்தை உயர்ந்த மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு ஆற்றலுடையவர்களாய் இருப்பார்கள் என நான் மெய்யாகவே நம்புகின்றேன்.

எமது முறைமைப்படுத்துபவர்களான, இலங்கை மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆகியோருக்கு துறையானது வளர்ச்சியடைந்து செழிப்படைவதற்கான ஓர் நியாயமான மற்றும் நீதியான தளத்தை உறுதிசெய்வதற்காக கொண்டுவரப்பட்ட அவர்களது செயல்திறனுடனான மற்றும் சீர்திருத்த கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அனைத்து பங்காளிகளான - வாடிக்கையாளர்கள், முதலீட்டாளர்கள், வழங்குனர்கள், மூலோபாய பங்காளிகள் மற்றும் ஏனையோருக்கு பல ஆண்டுகளாக எம்முடன் இருந்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த சவால்மிக்க சமயங்களில் பி.எல்.சி. குழுமத்தினை நீடிப்புத்திறனுடைய முன்னேற்றத்தை நோக்கி கொண்டுசெல்வதற்கு உங்களது தொடர்ச்சியான உறுதுணையினை வேண்டி நிற்கின்றோம்.



**டி பி குமாரகே**
*பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்*
பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி

2015 ஏப்ரல் 29
கொழும்பு

# சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கையின் மொழி பெயர்ப்பு

**கீழுள்ள பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி ஆண்டறிக்கையானது ஏர்னெஸ்ட் அன்ட் யங் பட்டய கணக்காளர்களால் 2015 ஏப்ரல் 29 திகதி கையொப்பமிடப்பட்ட ஆங்கில அறிக்கையினை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.**

**பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி. இன் பங்குதாரர்களுக்கு**

## நிதிக்கூற்றுக்களிலான அறிக்கை

நாம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி இன் நிதிக் கூற்றுக்களையும், கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளை (குழுமம்) ஒன்றிணைத்த நிதிக் கூற்றுக்களையும் கணக்காய்வு செய்துள்ளோம். இவை 2015 மார்ச் 31 இலான நிதியியல் நிலைமை, இலாப நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரித்துடைமை மாற்றங்களிலான கூற்று மற்றும் நிறைவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம் மற்றும் ஏனைய விளக்கக்குறிப்பு தகவல்கள் என்பன ஆண்டறிக்கையின் பக்கங்கள் 334 இலிருந்த 443 வரை கொடுக்கப்பட்டுள்ளன.

## நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களது பொறுப்பு

பணிப்பாளர் சபையானது (சபை) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை வழங்கும் இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு பொறுப்பாளியாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கும் பொறுப்பாளியாகும்.

## கணக்காய்வாளரது பொறுப்பு

எமது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயத்தினை தெரிவிப்பது எமது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக நாம் எமது கணக்காய்வினை நடாத்தினோம். இந்த நியமங்கள் நாம் நெறிமுறையான தேவைப்பாடுகளுக்கு அமைவுறுவதுடன் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பது பற்றிய நியாயமான உறுதிப்பாட்டினை பெறுவதற்காக நாம் கணக்காய்வினை திட்டமிட்டு மேற்கொள்ளவேண்டும் எனவும் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் பற்றிய கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்வதற்காக செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வானது ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. இந்த இடர்நேர்கையினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எமது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நாம் பெற்றுக்கொண்டுள்ளோம் என நம்புகின்றோம்.

## அபிப்பிராயம்

எமது அபிப்பிராயத்தின்படி ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31இல் குழுமத்தின் நிதி நிலைமை பற்றிய மெய்யான மற்றும் நியாயமான கருத்தினையும் நிறைவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்திறன் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் வழங்குகின்றன.

## ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) இன் தேவைப்பாட்டின்படி நாம் பின்வருவனவற்றை குறிப்பிடுகிறோம்.

அ) அபிப்பிராயத்தின் அடிப்படை, கணக்காய்வின் வரையெல்லை மற்றும் வரையறைகள் என்பன மேற் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆ) எமது அபிப்பிராயத்தின்படி,

- கணக்காய்விற்கு தேவைப்படும் அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் நாம் பெற்றுள்ளதுடன், எமது பரீசீலனைகளிலிருந்து இதுவரை தோன்றியவாறு, கம்பனியினால் முறையான கணக்கீட்டுப் பதிவுகள் பராமரிக்கப்பட்டுள்ளன.
- நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31இல் கம்பனியின் நிதி நிலைமை பற்றிய மெய்யான மற்றும் நியாயமான கருத்தினையும் நிறைவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்திறன் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் வழங்குகின்றன.
- கம்பனியினதும் குழுமத்தினதும் நிதிக்கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 151 மற்றும் 153 இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளன.

பட்டயக் கணக்காளர்கள்
2015 ஏப்ரல் 29
கொழும்பு

# இலாபம் அல்லது நட்ட கூற்று

| 31 மார்ச் இல் நிறைவடைந்த வருடத்திற்கானது | கம்பனி 2015 ரூபா '000 | கம்பனி 2014 ரூபா '000 | குழுமம் 2015 ரூபா '000 | குழுமம் 2014 ரூபா '000 |
|---|---|---|---|---|
| **வருமானம்** | 20,541,628 | 20,627,792 | 23,578,871 | 24,177,225 |
| வட்டி வருமானம் | 19,247,619 | 19,533,602 | 19,595,091 | 20,053,448 |
| கழி: வட்டிச் செலவினம் | 9,247,594 | 11,265,957 | 9,350,272 | 11,395,898 |
| **தேறிய வட்டி வருமானம்** | 10,000,025 | 8,267,645 | 10,244,819 | 8,657,550 |
| | | | | |
| உழைத்த தேறிய தவணைப்பணம் | - | - | 2,949,902 | 3,464,453 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 874,034 | 853,614 | 576,592 | 393,017 |
| தேறிய வர்த்தக வருமானம் | 57,985 | 7,628 | 120,741 | 29,838 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 361,990 | 232,948 | 336,545 | 236,469 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | 11,294,034 | 9,361,835 | 14,228,599 | 12,781,327 |
| கழி: கடனுக்கான வலுக்குன்றல் கிரயம் மற்றும் ஏனைய நட்டங்கள் | 1,644,876 | 1,217,746 | 1,670,681 | 1,229,856 |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | 9,649,158 | 8,144,089 | 12,557,918 | 11,551,471 |
| | | | | |
| **கழி:** | | | | |
| ஆளணிச் செலவுகள் | 1,565,226 | 1,338,049 | 1,802,013 | 1,521,900 |
| ஆதனம்,பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களது பெறுமானத்தேய்வு | 201,261 | 181,950 | 280,116 | 260,413 |
| அருவச் சொத்துக்களின் பெறுமதி குறைப்பு | 15,807 | 14,860 | 18,804 | 19,864 |
| நலன்கள், கோரல்கள் மற்றும் ஒப்புரவுச் செலவினங்கள் | - | - | 2,120,331 | 2,596,617 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 2,129,180 | 1,930,255 | 2,077,112 | 1,919,244 |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | 3,911,474 | 3,465,114 | 6,298,376 | 6,318,038 |
| | | | | |
| **பெறுமதி சேர்த்தல் வரிக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்** | 5,737,684 | 4,678,975 | 6,259,542 | 5,233,433 |
| கழி: நிதிச் சேவைகளில் பெறுமதி சேர்த்தல் வரி | 362,571 | 292,011 | 372,121 | 302,374 |
| **வருமான வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | 5,375,113 | 4,386,964 | 5,887,421 | 4,931,059 |
| கழி: வருமான வரிச் செலவுகள் | 1,622,153 | 1,263,218 | 1,785,879 | 1,467,844 |
| வருடத்திற்கான இலாபம் | 3,752,960 | 3,123,746 | 4,101,542 | 3,463,215 |
| | | | | |
| **பங்கொன்றிற்கான உழைப்பு** | | | | |
| பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (ரூபா) | | | 2.60 | 2.19 |
| சாதாரண பங்கொன்றிற்கான பங்கிலாபம் (ரூபா) | 1.25 | 1.25 | | |

# விரிவான வருமானக் கூற்று

| 31 மார்ச் இல் நிறைவடைந்த வருடத்திற்கானது | கம்பனி 2015 ரூபா '000 | கம்பனி 2014 ரூபா '000 | குழுமம் 2015 ரூபா '000 | குழுமம் 2014 ரூபா '000 |
|---|---|---|---|---|
| **வருடத்திற்கான இலாபம்** | 3,752,960 | 3,123,746 | 4,101,542 | 3,463,215 |
| **ஏனைய விரிவான வருமானம் / (செலவினங்கள்)** | | | | |
| **அடுத்துவரும் காலப்பகுதியில் ஏனைய விரிவான வருமானம் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளது (வரி கழித்ததன் பின்னர்)** | | | | |
| காசுப் பாய்ச்சல் இழப்புக் காப்பரண் | | | | |
| மூலாதார நிதியியல் முதலீடுகளிலிருந்து இலாபம் / (நட்டம்) | 6,318 | 653 | 6,318 | 653 |
| விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துக்கள் | | | | |
| விற்பனைக்குக் கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துக்களை மீள அளவிடுவதிலான இலாபம் / (நட்டம்) | 155,131 | 39,888 | 154,040 | 42,189 |
| வலுக்குன்றலுக்காக இலாப நட்ட கூற்றுக்கு மீள்சுழற்சிப்படுத்தல் | - | 25,000 | - | 25,000 |
| அடுத்துவரும் காலப்பகுதியில் தேறிய ஏனைய விரிவான வருமானம் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்பட்டுள்து | 161,449 | 65,541 | 160,358 | 67,842 |
| **அடுத்துவரும் காலப்பகுதியில் ஏனைய விரிவான வருமானம் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தக்கூடாதது (வரி கழித்ததன் பின்னர்)** | | | | |
| நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்கள் | 375 | (57,236) | (23) | (57,574) |
| மேற்குறிப்பிட்டவற்றில் ஒத்திவைக்கப்பட்ட வரி | (105) | 16,026 | 69 | 16,778 |
| அடுத்துவரும் காலப்பகுதியில் தேறிய ஏனைய விரிவான வருமானம் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தக்கூடாதது | 270 | (41,210) | 46 | (40,796) |
| **வரிகழித்த பின்னரான வருடத்திற்கான ஏனைய விரிவான வருமானம்** | 161,719 | 24,331 | 160,404 | 27,046 |
| **வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்** | 3,914,679 | 3,148,077 | 4,261,946 | 3,490,261 |

# நிதி நிலைமைக் கூற்று

| மார்ச் 31 இல் உள்ளவாறானது | கம்பனி 2015 ரூபா '000 | கம்பனி 2014 ரூபா '000 | குழுமம் 2015 ரூபா '000 | குழுமம் 2014 ரூபா '000 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 3,139,139 | 11,452,997 | 3,413,951 | 11,695,561 |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிடமுள்ள நிலுவைகள் | 326,321 | 3,329,562 | 1,830,668 | 4,725,904 |
| மூலாதார நிதியியல் கருவிகள் | - | 245 | - | 245 |
| நிதியியல் முதலீடுகள் - வர்த்தகத்திற்காக வைத்திருப்பவை | 196,193 | 184,243 | 503,268 | 378,312 |
| கடன்கள் மற்றும் வருமதிகள் | 98,411,195 | 90,218,355 | 97,996,856 | 90,341,901 |
| காப்புறுதி மற்றும் மீள்காப்புறுதி வருமதிகள் | - | - | 187,300 | 137,576 |
| நிதியியல் கருவிகள் - விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை | 939,199 | 224,068 | 2,043,342 | 1,316,819 |
| நிதியியல் கருவிகள் - முதிர்வுவரை வைத்திருக்கப்படுபவை | 5,266,407 | 4,746,558 | 5,266,407 | 4,746,558 |
| துணைக்கம்பனிகளில் முதலீடுகள் | 1,875,000 | 1,475,000 | - | - |
| இணைக்கம்பனிகளில் முதலீடுகள் | - | - | - | - |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 1,108,681 | 801,135 | 3,804,706 | 3,052,089 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 337,647 | 347,927 | 345,641 | 355,732 |
| முதலீட்டு ஆதனம் | - | 55,000 | - | - |
| ஏனைய சொத்துக்கள் | 723,197 | 941,346 | 1,768,840 | 1,666,080 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 112,322,979 | 113,776,436 | 117,160,979 | 118,416,777 |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்கு கொடுபடவேண்டியவை | 21,228,600 | 14,131,807 | 22,391,144 | 15,776,883 |
| வாடிக்கையாளர்களுக்கு கொடுபடவேண்டியவை | 34,022,572 | 40,921,485 | 33,930,221 | 40,839,278 |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் | 28,690,194 | 34,473,380 | 28,586,186 | 34,369,214 |
| ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் | 3,234,445 | 1,857,324 | 3,165,912 | 1,728,158 |
| மூலாதார நிதியியல் கருவிகள் | 92,193 | - | 92,193 | - |
| காப்புறுதி பொறுப்புக்கள் மற்றும் மீள்காப்புறுதி கொடுபடவேண்டியவைகள் | - | - | 2,894,358 | 2,570,540 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 550,042 | 446,832 | 618,198 | 540,841 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 1,949,490 | 1,573,461 | 1,976,418 | 1,598,573 |
| ஏனைய பொறுப்புக்கள் | 1,419,655 | 1,176,211 | 1,453,490 | 1,225,480 |
| **மொத்த பொறுப்புக்கள்** | 91,187,191 | 94,580,500 | 95,108,120 | 98,648,967 |
| **உரித்துவம்** | | | | |
| மூலதனம் | 12,936,073 | 12,736,073 | 12,936,073 | 12,736,073 |
| நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | 1,204,116 | 1,016,467 | 1,204,116 | 1,016,467 |
| நிறுத்திவைக்கப்பட்ட வருமானம் | 6,489,599 | 4,001,931 | 7,403,781 | 4,569,825 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 506,000 | 1,441,465 | 508,889 | 1,445,445 |
| **மொத்த உரித்துவம்** | 21,135,788 | 19,195,936 | 22,052,859 | 19,767,810 |
| **மொத்த பொறுப்புக்களும் உரித்துவமும்** | 112,322,979 | 113,776,436 | 117,160,979 | 118,416,777 |
| **எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கட்டப்பாடுகள்** | 4,400,063 | 2,379,252 | 5,308,209 | 3,007,091 |
| **பங்கொன்றிற்கான தேறிய சொத்தின் பெறுமதி** | 13.38 | 12.15 | 13.96 | 12.51 |

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் அமைவுறுமாறு இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதென நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

**சன்ஜீவ பண்டாரநாயக்க**
*பிரதம நிதியியல் அதிகாரி*

**டி. பி. குமாரகே**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*

பணிப்பாளர் சபையானது இந்த நிதிக்கூற்றுக்களது தயாரிப்பிற்கும் சமர்ப்பிப்பிற்கும் பொறுப்பாளியாயுள்ளது.
பணிப்பாளர் சபையின் சார்பில் அங்கீகரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**ஹேமசிரி பர்னாந்து**
*தலைவர்*
2015 ஏப்ரல் 29
கொழும்பு

**எம். பி. அமிர்தநாயகம்**
*பிரதித் தலைவர்*

PLC